Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ்Mirror

MONDAY, MAY 2, 2022

திங்கட்கிழமை மே 02, 2022 | ஒளி: 07 கதிர்: 294 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## நாட்டில் பாரிய எரிபொருள் நெருக்கடி ஏற்படக்கூடும்

நாட்டுக்கு எரிபொருளை ஏற்றி வரும் கப்பல்களில் இருந்து தரகுப் பணம் பெறும் மோசடி காரணமாக, நாட்டில் பாரிய எரிபொருள் நெருக்கடி ஏற்படக்கூடும் என கூட்டு தொழிற்சங்க கூட்டமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2



### ஐக்கிய மக்கள் சக்தி

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் மே தின பேரணி பெருந்திரளான மக்களுடன் பொரளை கெம்பல் மைதானத்தில் ஆரம்பமாகி, சுதந்திர சதுக்கத்தை சென்றடைந்தது.



### இ.தொ.கா

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மே தினக்கூட்டம் அதன் தலைவர் செந்தில் தொண்டமான் தலைமையில், கொட்டகலை சி.எல்.எப் இல் நடைபெற்றது.



### மக்கள் விடுதலை முன்னணி

மக்கள் விடுதலை முன்னணியின் மேதினப் பேரணி, கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் மாளிகாவத்தை பிடி சிறிசேன மைதானத்தில் இருந்து ஆரம்பமாகி, கொழும்பு கோட்டையை சென்றடைந்தது.

## அரசாங்கம் பதவி விலக வேண்டும்

### மக்களின் கோரிக்கையை ஏற்குமாறு மைத்திரி வலியுறுத்து

இந்த அரசாங்கத்தின் தலைவர்கள் பதவி விலக வேண்டும் என்பதே நாட்டு மக்களின் கோரிக்கை என்று தெரிவித்த முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன, மக்களின் கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

இடைக்கால அரசாங்கம் குறித்து ஆராய

# 5 பேரடங்கிய குழு நியமனம்

### இடைக்கால அரசாங்கம் தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை

### இடைக்கால அரசாங்கத்துக்கு கட்சிகளின் ஆதரவை பெறும் நோக்கம்

அரசாங்கத்தில் இருந்து விலகி, எதிரணியில் சுயாதீனமாக இயங்கும் 11 கட்சிகளின் சார்பாக, இடைக்கால அரசாங்கம் தொடர்பில் ஆராய்வதற்காக ஐவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஏனைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அக்கட்சிகளின் ஆதரவை பெற்றுக்கொள்ளும் வகையிலேயே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான நிமல் சிறிபாலடி சில்வா, அநுர பிரியதர்சன யாப்பா, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, டிரான் அலஸ் ஆகியோரே அக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

தொடர்ச்சி P2

## ரங்கல படுகொலை; மீகொடையில் மூவர் கைது

தெல்தெனிய, ரங்கல பொலிஸ் பிரிவில் ஏப்ரல் 8 ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில், மீகொடையில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூவரிடமிருந்து துப்பாக்கி, ரவைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## எரிசக்தி அமைச்சரின் அச்சுறுத்தலுக்கு அஞ்சோம்

### முடிந்தால் அனுமதியை இரத்து செய்யுமாறு சவால்



பௌசர் உரிமையாளர்களின் அனுமதிப்பத்திரங்களை முடிந்தால் இரத்து செய்து காட்டுமாறு சவால் விடுத்த இலங்கை பெற்றோலிய தனியார் பௌசர் உரிமையாளர்கள் சங்கம், எரிசக்தி அமைச்சரின் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சப்போவதில்லை எனவும் நேற்று (01) தெரிவித்தது.

நேற்று (01) நடைபெற்ற ஊடகவியாளர் சந்திப்பில், இலங்கை பெற்றோலிய தனியார் பௌசர் உரிமையாளர்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் டி.வி சாந்த சில்வா மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

02 நாள்களுக்கு சேவைக்கு வராத

## பவுசர்களின் அனுமதி இரத்துச் செய்யப்படும்



எதிர்வரும் இரண்டு நாள்களுக்குள் சேவைக்கு வராத பவுசர்களின் அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்வதுடன், சேவைக்கு வரும் வாகனங்களுக்கு இடையூறு விளைவிப்பவர்களின் வாகன அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்து, அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நேற்று (01) தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலிய தனியார் பவுசர் உரிமையாளர்கள் சங்கம் முன்னெடுத்துள்ள வேலை நிறுத்தத்தையடுத்து, எரிபொருள் போக்குவரத்துக்காக வெளியிட்டுள்ள புதிய விதிமுறைகளிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

ஓட்டோ – தனியார் பஸ்

## நேருக்கு நேர் மோதி விபத்து; மூவர் பலி

பொலன்னறுவை- மட்டக்களப்பு பிரதான வீதியின் மன்னம்பிட்டி, கொடலிய பாலத்துக்கு அருகில் நேற்று (01) அதிகாலை இடம்பெற்ற விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர் என்று மன்னம்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.



தொடர்ச்சி P2

## இடைக்கால அரசாங்கம் வெறும் ஊழல் ஏற்பாடு

### இணைவதை விட பதவியை இராஜினாமா செய்வேன் என்கிறார் சஜித்

இடைக்கால அரசாங்கத்துக்கான பிரேரணையானது திருட்டு, ஊழலில் இருந்து விடுபடுவதற்கான வெறும் ஊழல் ஏற்பாடு என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ,



தொடர்ச்சி P2

2023இன் இறுதிக்குள் இலங்கையின்

## பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தலாம்

### சரியான தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்கிறார் ரணில்

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் சரியான தீர்மானங்களை எடுத்தால், 2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த முடியும் என்று முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




## இ.தொ.காவை யாராலும் அசைக்க முடியாது

### தலைவர் செந்தில் தொண்டமான் சூளுரை

இலங்கை தொழிலாளர் காங்கிரஸானது, மலையக மக்களின் நலன் கருதி பல தசாப்தங்களாக சேவையாற்றி வந்துள்ளது. மறைந்த தலைவர்களான சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் மலையக மக்கள் வாழ்வதற்கான உரிமையைப் பெற்றுக்கொடுத்தனர்.

தொடர்ச்சி P2



மக்கள் பக்கமே நாம் என்பதால்

## ராஜபக்ஷர்களின் உறவை முறித்துக் கொண்டோம்

எஸ்.கணேசன்

“நான் பதவிக்காக அரசியல் செய்பவன் அல்ல. மக்களுக்கானதே எனது அரசியல் பயணம். அதனால்தான் ராஜபக்ஷ அரசாங்கத்துடனான உறவை முறித்துக்கொண்டு, இன்று மக்கள் பக்கம் நிற்கின்றோம். அப்படி இருந்தும் வரலாறு தெரியாத சிலர், காங்கிரஸை விமர்சித்து வருகின்றனர்” என, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

Viber




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

CLICK



## நாட்டில் பாரிய எரிபொருள் நெருக்கடி ஏற்படக்கூடும்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் குறைந்த எண்ணிக்கையிலான எரிபொருள் பௌசர்களே இருப்பதாகவும் எரிபொருள் பௌசர்கள் இன்று முதல் இயங்காது என்றும் கூட்டமைப்பின் அழைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்தார்.

எரிபொருள் விலை அதிகரிப்புடன் ஒப்பிடும் போது போக்குவரத்து செலவுகளை அதிகரிக்கத் தவறியமைக்கு எதிராக இலங்கை பெற்றோலிய தனியார் பௌசர் உரிமையாளர்கள் சங்கம் சனிக்கிழமை (30) நள்ளிரவு முதல் நடவடிக்கைகளில் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்துள்ளது.

தனியார் எரிபொருள் பௌசர் உரிமையாளர்கள் கோரும் கட்டணத்தை 60 சதவீதமாக அதிகரிப்பது தொடர்பில் சனிக்கிழமை பிற்பகல் விடயதான அமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாடல் தோல்வியடைந்துள்ளது எனவும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டதன் தாக்கம் இன்று முதல் உணரப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருளை விநியோகிப்பதற்காக 82 எரிபொருள் பௌசர்கள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இல்லை என்று கூறிய அவர், அமைச்சர் வெறும் வெற்று அறிக்கைகளை வெளியிடுகிறார் என்றும் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என்றும், எதிர்காலத்தில் எரிபொருள் பிரச்சினை மேலும் மோசமடையும் என்றும் கூறினார்.

நான்கு நாள்களுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து கடைசி இரண்டு எரிபொருள் தொகுதிகள் நாட்டுக்கு வரவிருந்த நிலையில், ஏப்ரல் 19 ஆம் திகதி முதல் இலங்கைக்கு எரிபொருள் இறக்குமதி செய்யப்படவில்லை என்றும் நெருக்கடி மற்றும் பொதுமக்கள் பல சிரமங்களுக்கு உள்ளாகியுள்ள நிலையில், தரகுப் பணம் பெற அதிகாரிகள் முயற்சிப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.

## அரசாங்கம் பதவி விலக வேண்டும்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் நேற்று (01) கலந்து கொண்டு உரையாற்றியபோதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி சுபீட்சமான நாட்டைக் கையகப்படுத்திய போதிலும் 2 இலட்சம் முதல் 3 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பட்டினி கிடக்கும் நிலைமைக்கு வந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

> **மக்கள் வீடுகளுக்குள் இறந்து கொண்டிருக்கிறார்கள். சிலர் வீதிகளில் செல்லும் போது மயங்கி விழுந்து இறக்கின்றனர்**

இந்த அரசாங்கத்தின் தலைவர்கள் பதவி விலக வேண்டும் என்பதே நாட்டு மக்களின் கோரிக்கை என வலியுறுத்திய முன்னாள் ஜனாதிபதி, தேர்தலை நடத்தி புதிய அரசாங்கத்தை தெரிவு செய்வதற்கு மக்களுக்கு இடமளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

"மக்கள் வீடுகளுக்குள் இறந்து கொண்டிருக்கிறார்கள். சிலர் வீதிகளில் செல்லும் போது மயங்கி விழுந்து இறக்கின்றனர். மேலும் போராட்டத்தின் போது ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அரசாங்கம் தொடர்ந்தும் ஆட்சியில் இருந்தால் இந்த நிலைமை மேலும் அதிகரிக்கலாம். மக்களின் கோரிக்கையை அரசாங்கம் ஏற்க வேண்டும்" என்றார்.

# 5 பேரடங்கிய குழு நியமனம்

இடைக்கால அரசாங்கம் தொடர்பில் சுயாதீன குழுவினர், ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். அந்த செயற்பாட்டை துரிதப்படுத்தும் நோக்கிலேயே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது என தேசிய சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

இந்தக் குழுத்தொடர்பில், ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நிறுவப்படும் அரசாங்கம் இடைக்கால அரசாங்கமாக அமைவதற்கான சாத்தியக்கூறுகள் ஆகக் கூடுதலாகவே இருக்கின்றன என்றும் ஜயந்த சமரவீர எம்.பி தெரிவித்துள்ளார்.

## ரங்கல படுகொலை: மீகொலடையில் மூவர் கைது

இதனிடையே, வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி, 9 மில்லி மீட்டர் நீளமுடைய 12 ரவைகள், 5.26 மில்லி மீற்றர் நீளமுடைய 11 ரவைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

22 மற்றும் 24 வயதுடைய ஒவிட்டிகம, யட்டபாத்த பகுதிகளைச் சேர்ந்த இரு சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

## எரிசக்தி அமைச்சரின் அச்சுறுத்தலுக்கு அஞ்சோம்

புதிய அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும் என்ற விசித்திரக் கதைகளுக்கு பௌசர் உரிமையாளர்கள் அஞ்சவில்லை எனவும் புதிய அனுமதிப் பத்திரங்களைப் பெற்று ஒரு பௌசரை இயக்குவதற்கு குறைந்தது ஆறு மாதங்கள் எடுக்கும் எனவும் சுட்டிக்காட்டினார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளால் அமைச்சர் தவறாக வழிநடத்தப்பட்டமைக்கு வருந்துவதாகத் தெரிவித்த அவர், அனைத்து பௌசர் உரிமையாளர்களும் தமது அனுமதிப் பத்திரங்களை விற்று பணத்தை வங்கியில் வைப்பிலிட்டு பிழைப்பு நடத்தத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

எரிபொருள் விலையேற்றத்துடன் எரிபொருள் தாங்கிகளின் விலை அதிகரிப்பு சூத்திரத்தை பின்பற்றியிருந்தால் பிரச்சினை இருந்திருக்காது எனவும் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் 6ஆம் திகதி இடம்பெறவுள்ள பாரிய வேலைநிறுத்தப் போராட்டத்தில் பௌசர் உரிமையாளர்கள் ஈடுபடவுள்ளனர் என்பதால் அரசாங்கம் அடக்குமுறையைத் தெரிவு செய்துள்ளது என்றார்.

## பௌசர்களின் அனுமதி இரத்து செய்யப்படும்

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கிராமப்புற டிப்போக்களுக்கு ரயில் எரிபொருள் போக்குவரத்தின் திறனை 40% முதல் 100% வரை அதிகரிப்பது. இது போக்குவரத்துச் செலவை வெகுவாகக் குறைக்கும். இதுவும் நிரந்தர தீர்வாக அமையும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன போக்குவரத்து விலையில் இதுவரை பதிவு செய்யப்படாத புதிய வாகனங்களுக்கு அனுதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் 24 மணி நேரமும் பணியாளர்களை நியமித்து அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான காலத்தைக் குறைத்து ஒரு வாரத்துக்குள் புதிய அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு சொந்தமான பௌசர்களுக்கு தனியான பெற்றோல் விநியோக முனையங்களை ஒதுக்கி அவற்றுக்கு முன்னுரிமை வழங்குதல்.

நாளாந்தம் இயங்கும் அரசாங்கத்துக்குச் சொந்தமான பௌசர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது, உள்வரும் தனியார் வாகனங்களுக்கான நிலையான விலை சூத்திரத்தில் தேவையான திருத்தங்களைச் செய்வது மற்றும் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குதல் ஆகிய விதிமுறைகள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## நேருக்கு நேர் மோதி விபத்து மூவர் பலி

தனியார் பஸ்ஸொன்று ஓட்டோவுடன் நேருக்கு நேர் மோதியதிலே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது என்றும் அரலகங்வில, அருணபுர பகுதியைச் சேர்ந்த மூவரே உயிரிழந்துள்ளர் என்றும் தெரியவந்துள்ளது.

அரலகங்வில, அருணபுர பகுதியில் இருந்து மாத்தளையில் உள்ள உறவினரின் வீட்டுக்கு ஓட்டோவில் சென்று கொண்டிருந்த போது விபத்து இடம்பெற்றுள்ளது.

பொலன்னறுவையில் இருந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு ஊழியர்களை ஏற்றிச் சென்ற தனியார் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான ஓட்டோ மற்றுமொரு பஸ்ஸை முந்திச் செல்ல முயன்றபோது, எதிரே வந்த தனியார் பஸ்ஸுடன் நேருக்கு நேர் மோதியுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என மன்னம்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

## இடைக்கால அரசாங்கம் வெறும் ஊழல் ஏற்பாடு

இவ்வாறான மோசடி அரசாங்கத்தில் இணைந்து கொள்வதை விட விருப்பத்துடன் எதிர்க்கட்சி தலைவர் பதவியை இராஜினாமா செய்து, தனது கொள்கைகளை நிலைநாட்டுவேன் என்று தெரிவித்தார்.

> **இடைக்கால அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கத் தவறினால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இழக்க நேரிடும் என அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்**

தனது தந்தையும் முன்னாள் ஜனாதிபதியுமான பிரேமதாஸவின் 29ஆவது நினைவஞ்சலி நிகழ்வில் நேற்று (01) கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்காக மக்களின் போராட்டத்தை காட்டிக்கொடுக்கப் போவதில்லை என்று குறிப்பிட்ட அவர், அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் பொதுமக்கள் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ள இவ்வேளையில் சலுகைகளை பெற்றுக்கொள்ள விரும்பவில்லை என்றார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம் பதவி விலகுவதற்கு விருப்பமில்லாமல் தொடர்ந்தும் ஆட்சியைப் பிடித்துக்கொண்டிருப்பதாகவும் இடைக்கால அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கத் தவறினால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இழக்க நேரிடும் என அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தை அமைப்பதற்கு கைகொடுக்கப்போவதில்லை எனவும் தனது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை விருப்பத்துடன் வழங்குவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மக்களின் ஆசீர்வாதத்துடன் ஆட்சியில் ஈடுபடுவோம் என்றும், பொதுமக்களின் தீர்மானத்துக்கு மதிப்பளிப்போம் என்றும் மேலும் தெரிவித்தார்.

## ராஜபக்ஷர்களின் உறவை முறித்துக் கொண்டோம்

கொட்டகலை சி.எல்.எப். வளாகத்தில் நேற்று (01) நடைபெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் மக்கள் பக்கம் நின்றே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முடிவெடுத்தது. ஆனால், எமது சமூகத்தை காட்டிக்கொடுக்கும் விதத்தில் ஒரு சிலர் செயற்படுவதால் தலைகுனிந்து நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

> **எமது மக்களுக்கு நில உரிமை வேண்டும். 150 வருடங்களாக நிலமற்றவர்களாக வாழ்கின்றோம். இதனை பெற்றுக்கொடுப்பதற்கு இந்தியாவின் உதவியும் அவசியம்**

ஆயிரம் ரூபாய் என்பது எமது இலக்கல்ல என்பதை தேர்தல் காலத்திலேயே அறிவித்துவிட்டோம். கல்வியும் காணி உரிமையும்தான் பிரதான இலக்கு. அதனை அடைவதற்கே தீவிர முயற்சியில் இறங்கி உள்ளோம். எண்ணம்போல்தான் செயல் என்பார்கள், மலையகத்தில் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே எனது கனவும்கூட.

"மக்களின் தன்னெழுச்சி போராட்டத்தில் இ.தொ.கா பட்டி அணிவிக்கப்பட்டிருந்தது குறித்தும் விமர்சிக்கின்றனர். இ.தொ.கா என்பது மக்கள் இயக்கம். மக்களை பாதுகாத்த அரசியல் இயக்கம். மக்களுக்கு உரிமைகளை வென்று கொடுத்த அரசியல் கட்சி. எனவே, அதை அணிவதில் சிக்கல் கிடையாது. இதற்கு ஏன் பதிலளிக்கவில்லை என சிலர் கேட்கின்றனர். நாய்கள் குரைக்கும்போது, சிங்கங்கள் அஞ்சுவது கிடையாது.

எமது மக்களுக்கு நில உரிமை வேண்டும். 150 வருடங்களாக நிலமற்றவர்களாக வாழ்கின்றோம். இதனை பெற்றுக்கொடுப்பதற்கு இந்தியாவின் உதவியும் அவசியம். அதற்கான உறவு பாலமாக அண்ணாமலை இருப்பார் என நம்புகின்றேன்" என்றார்.

## இ.தொ.காவை யாராலும் அசைக்க முடியாது

அப்பெருந்த தலைவர்களுடைய கொள்கைகளுடனேயே காங்கிரஸின் பயணம் தொடரும் என்று தெரிவித்த இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் அவ்வாறு பயணிக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பயணத்தை தடுக்கவும் முடியாது. காங்கிரஸை யாராலும் எக்காலத்திலும் அசைக்க முடியாது.

கொட்டகலை சி.எல்.எப் இல் நேற்று (1) நடைபெற்ற, மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஓர் அரசியல் கட்சிக்கான ஆதரவை காங்கிரஸ் மீளப் பெறுவதாயின், அது தொடர்பில் பல முறை கலந்துரையாடியே தீர்மானிக்குமே தவிர, அவசரத்திலோ அல்லது பதற்றத்திலோ அவ்வாறான தீர்மானமொன்றை கட்சி ஒருபோதும் எடுக்காது.

தற்போதைய அரசாங்கத்துடனும் சரி, அதற்கு முன்னரான அரசாங்கத்துடனும் சரி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நீண்ட காலம் பயணித்திருக்கிறது. அந்தப் பயணங்கள், ஓரிரு நாள் பயணங்களாகவன்றி, மலையக மக்களின் நலனுக்கான தொலைதூர நோக்கத்துடன் கூடிய நீண்டநாள் பயணங்களாகவே இருந்திருக்கின்றன.

இன்றைய சூழ்நிலையில் நாடு எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடி காரணமாக, எதிர்வரும் காலங்கள் மிகவும் தீர்மானமிக்கதாக அமைந்திருக்கும். இவ்வாறான சூழ்நிலையில், நாம் அனைவரும் சிந்தித்துச் செயற்பட வேண்டிய கட்டத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி மாத்திரமே, இலங்கையின் மலையகப் பிரதேசத்துக்கு விஜயம் செய்திருந்தார். அவரது விஜயம் மக்களைக் கௌரவித்தது மாத்திரமன்றி, அம்மக்களுக்காகப் பத்தாயிரம் இந்திய வீட்டுத் திட்டத்துக்கான ஏற்பாடுகளையும் செய்துவிட்டே சென்றார். அத்துடன், மலையகப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகளுக்கான உதவிகளையும் இந்திய பிரதமர் வழங்கியுள்ளார்.

அவ்வாறே, தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை, மலையகத்துக்கான விஜயத்தை மேற்கொண்டிருப்பது, எமது உறவை மேலும் பலப்படுத்தியுள்ளதுடன் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் அளித்திருக்கிறது. எதிர்காலத்தில் இந்திய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களில் மலையக மக்களும் உள்ளடக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கை இன்று வலுப்பெற்றிருக்கிறது என்றார்.

## பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தலாம்

தேசிய ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பு நகர மண்டபத்தில் நேற்று (09) நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பழைய அரசியலில் இருந்து விடுபட்டு, புதிய பயணத்துக்கு அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்றும் இந்த நாட்டின் இளைஞர்களின் எதிர்காலம் மாத்திரமன்றி அனைவரினதும் எதிர்காலம் இன்று தொலைந்து போயுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இப்போது இலங்கை அராஜகமாகியுள்ளதாகவும் அனைத்து இடங்களிலும் போராட்டங்கள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்த அவர், 'கோட்டாவே வீட்டுக்குப் போ', 'ராஜபக்ஷர்களே வீட்டுக்குப் போ' என்ற இரண்டு கோஷங்கள் மட்டுமே இருப்பதாகவும் தெரிவித்தார்.

அரசாங்கத்துக்குள் விரிசல் ஏற்பட்டுள்ளதாகவும், அந்தக் குழுவுக்கும் சகோதரர்களுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் 2019 ஜனாதிபதித் தேர்தலிலும் 2020 பாராளுமன்றத் தேர்தலிலும் வழங்கப்பட்ட ஆணையும் தெளிவான மொழியில் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

> **அரசாங்கத்துக்குள் விரிசல் ஏற்பட்டுள்ளதாகவும், அந்தக் குழுவுக்கும் சகோதரர்களுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டுள்ளது**

2024 வரை நீடிக்கும் உலகளாவிய உணவு நெருக்கடி இலங்கையையும் பாதிக்கும் என உலக வங்கி எச்சரித்துள்ள நிலையில் சீனா, இந்தியா, அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகளுடன் உறவுகளை மீள ஏற்படுத்துவதே தேசத்தின் முன்னுரிமை என்றார்.







# தொழிலாளர் தினம்...

தொழிலாளர் தினமான நேற்று (01), அரசியல் கட்சிகள் மேதின பேரணிகளையும் கூட்டங்களையும் நடத்தின. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கூட்டங்கள், கிளிநொச்சியிலும் மட்டக்களப்பிலும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் கூட்டம் மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்திலும், ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய ஊழியர் சங்க கூட்டம், புதிய நகர மண்டபத்திலும், ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் கொழும்பிலும் நடைபெற்றன.














### சஜித், அநுர இல்லை என்றால்

# சர்வகட்சி இடைக்கால அரசாங்கம் இல்லை

ஐக்கிய மக்கள் சக்தியினரும் தேசிய மக்கள் சக்தியினரும் சர்வகட்சிகளைக் கொண்ட இடைக்கால அரசாங்கத்தில் இணையவில்லை என்றால் நாட்டில் சர்வகட்சி இடைக்கால அரசாங்கமொன்றை அமைக்க முடியாதென ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.



சர்வமதத் தலைவர்கள், சர்வகட்சி தலைவர்களுடனான சந்திப்பொன்று நேற்று முன்தினம் (30) இலங்கை மன்றத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் இதில் கலந்துகொண்டனர். குறிப்பாக, ஆளுங்கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இதன்போது அழைப்பு விடுக்கப்பட்டதாக மகாநாயக்க தேரர்கள் தெரிவித்தனர். எனினும் ஆளுங்கட்சியினர் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை எனவும் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகளை, அரசியலமைப்பு ரீதியாகத் தீர்த்து வைக்க வேண்டும். எனவே, தற்போதைய நிலையைக் கருத்திற்கொண்டு, சர்வகட்சிகளைக் கொண்ட இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என யோசனையை முன்வைத்தோம் எனவும் கூறினார்.

அரசாங்கத்தக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினரால் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பதற்கு, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கட்சி தீர்மானித்துள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

## எவரது கருத்துகளுக்கும் அரசாங்கம் செவிசாய்ப்பதில்லை

மதத் தலைவர்களின் கருத்துகளுக்குக் கூட அரசாங்கம் செவிசாய்ப்பதில்லை என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.



தற்போதைய நெருக்கடி நிலைமைகளுக்கு மாநாயக்க தேரர்கள் முன்வைத்த யோசனை தொடர்பில் சர்வகட்சி தலைவர்கள் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்துவதற்காக நாம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். இதற்காக அனைத்துக்கட்சி தலைவர்கள் கூட்டமொன்றை கூட்டியிருந்தோம். எங்களது அழைப்பை ஏற்று பல கட்சித் தலைவர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டதோடு அவர்களது யோசனைகளையும் எமக்கு முன்வைத்துள்ளார்கள்.

இந்தக் கலந்துரையாடலின் இறுதிக்கட்ட கலந்துரையாடலை, விரைவாக முன்னெடுப்பதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம். மேலும் இக்கூட்டத்தில் ஆளுங்கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த எவரும் கலந்துக்கொள்ளவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது. எவ்வாறாயினும் அக்கட்சி சார்பில் நாம் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸூக்கு அழைப்பு விடுத்திருந்தோம். இதன்போது பிரதமர் பதவி தொடர்பில் அரசாங்கம் தீர்மானம் ஒன்றுக்கு வந்துள்ளது. எனவே, இக்கூட்டத்தில் நாம் கலந்து கொள்ளப்போவதில்லை என ஜீ.எல்.பீரிஸ் எம்மிடம் கூறினார்.

எனினும், இக்கூட்டத்தில் கலந்துகொண்டு மத்தியஸ்தம் வகித்து, ஏனையோரின் கருத்துகளுக்கு செவிமெடுப்பதற்காக ஆளுங்கட்சியினர் வர வேண்டுமென நாம் பீரிஸிடம் கூறியிருந்தபோதிலும் எவரும் இக்கூட்டத்தில் கலந்துக்கொள்ளவில்லை. மதத் தலைவர்களின் கருத்துகளுக்குக் கூட அரசாங்கம் செவி சாய்ப்பதில்லை என்பதே இதனூடாகத் தெரிகிறது எனவும் அவர் கூறினார்.

## சாரதி அனுமதிப்பத்திரத்துக்கும் சிக்கல்

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் தட்டுப்பாட்டு நெருக்கடி நிலைமைகளால் சாரதிகளுக்கான சாரதி அனுமதிப் பத்திர டிஜிட்டல் அட்டை விநியோகிக்கும் பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான பரீட்சைகளுக்கு தோற்றிய மூன்று இலட்சம் பேருக்கு இதுவரையில் சாரதி அனுமதிப் பத்திர அட்டை விநியோகிக்கப்படவில்லை எனவும் அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாதந்தோறும் 60 ஆயிரம் சாரதி அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்படுவதாகவும், 2021ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் சாரதிகளுக்கு வழங்கப்படும் டிஜிட்டல் அடையாள அட்டையை விநியோகிக்க முடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### கோட்டா தலைமையிலான

## இடைக்கால அரசாங்கத்தில் இணையப்போவதில்லை

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் அமைக்கப்படும் இடைக்கால அரசாங்கத்தில் ஐக்கிய மக்கள் சக்தியினரும், தேசிய மக்கள் சக்தியினரும் ஒருபோதும் இணையப்போவதில்லை என அறிவித்துள்ளனர்.

சர்வமதத் தலைவர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதாக இருந்தால் நம்பிக்கைக்குரிய ஜனாதிபதி ஒருவர் இருக்க வேண்டும். தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது எமக்கு நம்பிக்கை இல்லை. எனவே, அவருடன் இடைக்கால அரசாங்கத்தை அமைக்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

இதேவேளை இதன்போது கருத்துத் தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், தற்போதைய அரசாங்கம் ஆட்சியில் இருந்து விலக வேண்டும். தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பதவி விலக வேண்டும் என்றே கூறுகிறார்கள். இவ்வாறான நிலையில் தற்போதைய ஜனாதிபதியின் கீழான இடைக்கால அரசாங்கத்தில் நாம் இணையப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

தற்போதைய நெருக்கடி நிலைமையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே உருவாக்கினார். எனவே அவரது தலைமையிலான அமைச்சரவையின் ஊடாக, இப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண முடியாது.

மேலும், நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமையைத் தீர்க்க வேண்டுமாக இருந்தால், விரைவாகத் தேர்தல் ஒன்றுக்கு செல்வதே சரி எனவும் விஜித ஹேரத் கூறினார்.

## கறுப்புப் பட்டி கவலையளிக்கிறது

காலி முகத்திடலில் உள்ள எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கவின் உருவ சிலைக்கு போராட்டக்காரர்கள் கறுப்புப்பட்டி அணிவித்துள்ளமை கவலைக்குரியதென ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதவிசாளர் பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் தெரிவித்துள்ளார்.



இந்தச் செயற்பாடு அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தை திசை திருப்புவதற்கான முயற்சி எனவும் தெரிவித்த அவர், இந்தியாவை மையமாகக் கொண்டு இயங்கி வரும் இணையத்தளம் ஒன்று, பண்டாரநாயக்கவின் உருவ சிலை தொடர்பிலும், அவரின் கொள்கைகள் தொடர்பிலும் கேள்வி எழுப்பி, அந்த உருவச் சிலையை அழிக்க வேண்டுமெனவும் கட்டுரை ஒன்றை பிரசுரித்திருந்தது.

இக்கட்டுரையின் அடிப்படையிலேயே பண்டாரநாயக்கவின் உருவச் சிலைக்கு கறுப்புப் பட்டி அணிவிக்கப்பட்டதாகவும், போராட்டக்களத்தில் இளைஞர்கள் இது தொடர்பில் அவதானத்துடன் இருக்க வேண்டும் எனவும் மஹிந்த அமரவீர கேட்டுக்கொண்டார்.

# வடமராட்சி கடலில் மீனவரின் படகுடன் கடற்படை படகு மோதி விபத்து

■ எம். றொசாந்த்

வடமராட்சி கடற்பரப்பில் கடற்படைப் படையினரின் படகு மோதி கடற்தொழிலாளர் சங்கத் தலைவரின் படகு சேதமடைந்துள்ளது.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் கடற்தொழிலாளிகள் இருவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியதுடன், சங்கத் தலைவரின் படகு மற்றும் இயந்திரம் மீளப் பயன்படுத்த முடியாதவாறு சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை, சுப்பர்மடம் கடற்தொழிலாளர் சங்கத்தின் தலைவர் தேவராசா தேவகுமார் என்பவரது படகே சேதமடைந்துள்ளது.

படகு சேதமடைந்ததால் நடுக்கடலில் தத்தளித்த கடற்தொழிலாளிகள் இருவரையும் சில நிமிடங்கள் கழித்து கடற்படையினர் படகுடன் இழுத்து வந்து கரை சேர்த்துள்ளனர்.

சம்பவத்தில் கடற்படையின் படகு மோதியதால் தனது படகு மீளப் பயன்படுத்த முடியாதவாறு சேதமடைந்துள்ளதாகவும் 1,000,000 ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை வாசிகளை

## தமிழகம் அழைத்து செல்ல முற்பட்ட படகோட்டிகள் மறியலில்



■ எம். றொசாந்த்

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் வந்து, பலாலி கடற்பரப்பின் ஊடாக இந்தியா செல்ல முற்பட்ட 13 பேரில் பலாலியைச் சேர்ந்த இரண்டு படகோட்டிகளையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் தடுத்து வைக்க உத்தரவிட்ட நீதவான் ஏனைய 11 பேரையும் பிணையில் விடுத்துள்ளார்.

திருகோணமலை, தில்லை நகர் பகுதியைச் சேர்ந்த மூன்று ஆண்கள், மூன்று பெண்கள், ஐந்து சிறுவர்கள் மற்றும் படகோட்டிகளான பலாலி, அன்ரனிபுரம் பகுதியைச் சேர்ந்த இரண்டு ஆண்களும் உள்ளடங்கலாக 13 பேர், பலாலி கடற்பரப்பின் ஊடாக வெள்ளிக்கிழமை (29) இரவு இந்தியா நோக்கி படகொன்றில் பயணித்த வேளை, கடல் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த காங்கேசன்துறை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் அவர்கள் பயணித்த படகு மற்றும் அதற்கான வெளியிணைப்பு இயந்திரம், இயந்திரத்துக்குத் தேவையான எரிபொருள் என்பவையும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட 13 பேரையும் மீட்கப்பட்ட படகு, இயந்திரம் உள்ளிட்டவற்றை கடற்படையினர் சட்ட நடவடிக்கைக்காக பலாலி பொலிஸாரிடம் கையளித்தனர்.

பொலிஸார் அவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பின்னர், நேற்று முன்தினம் மாலை மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். அத்துடன் சான்று பொருட்களாக படகு, வெளியிணைப்பு இயந்திரம் உள்ளிட்டவற்றையும் மன்றில் பாரப்படுத்தினர்.

வழக்கை விசாரித்த மல்லாகம் நீதவான், படகோட்டிகள் இருவரையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறும் , ஏனைய 11 பேரையும் பிணையில் செல்ல அனுமதித்து, 12ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்துக் கட்டளையிட்டார்.



## முள்ளிவாய்க்கால் பகுதியில் வெடிபொருட்கள் மீட்பு

■ விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் பகுதியில் நேற்று முன்தினம் வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கேற்ப, எட்டு ஆர்.பி.ஜி குண்டுகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

மூங்கிலாறு

## மருத்துவமனை மீது தாக்குதல்; ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

முல்லைத்தீவு, மூங்கிலாறு ஆதார மருத்துவமனையில் தனது பிள்ளைகளுக்கு சிகிச்சையை பெற்றுக்கொள்ள முடியாத தந்தை ஒருவர் ஆத்திரம் அடைந்து, மருத்துவமனை மீது தாக்குதலை நடத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது; வெள்ளிக்கிழமை (29) அன்று, தனது இரண்டு பெண் பிள்ளைகளுக்கு காச்சல் ஏற்பட்டுள்ள நிலையில், மூங்கிலாறு ஆதார வைத்தியசாலைக்கு நோய்க்கான சிகிச்சை பெற வைத்தியசாலைக்கு கூட்டிச் சென்ற தந்தை ஒருவர், அனுமதிச்சிட்டை வழங்கப்பட்ட பின்னர், வைத்தியர் இரண்டு மணியின் பின்னரே நோயாளியை பார்வையிடுவார் என்று கூறியதற்கு, வைத்தியசாலையில் கண்ணாடியை அடித்து உடைத்து, அங்கே காவல் கடமையில் இருந்த காவலாளியின் கையையும் தாக்கியுள்ளதுடன் மருத்துவமனையின் பெயர் பலகையையும் சேதப்படுத்தியுள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்து, நேற்று முன்தினம் (30) மூங்கிலாறு ஆதார மருத்துவமனை வைத்தியர்கள், ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டு, கவனயீர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்தார்கள்.

அடையாளம் காணப்பட்ட நபரால் வைத்தியசாலையின் அரச சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டு, ஊழியர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமையை கண்டித்து, ஒரு மணிநேர அடையாள பணி பகிஸ்கரிப்பை மேற்கொண்டுள்ளார்கள்.

மூங்கிலாறு ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் செல்லும் மக்கள், நீண்டநேரம் காத்திருந்து சிகிச்சை பெற்றும் மருந்தினை பெற்றுக்கொள்ள காத்திருக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்த மருத்துவமனையின் மருந்தாளர் தேவிபுரம் மருத்துவமனையிலும் மருந்து வழங்கிவிட்டு, சில நேரங்களில் மாலை வேளையிலேயே அல்லது நண்பகலுக்கு பின்னரான வேளையிலேயே மருந்து வழங்கும் நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றார்கள்.

இதனால், மருத்துவமனைக்குச் செல்லும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள். இவ்வாறான நிலையை மருத்துவ அதிகாரிகள் கவனத்தில் எடுத்து, இதனை தீர்த்துவைக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

மருத்துவமனை அரச சொத்துகளுக்கு சேதம் விளைவித்தமை, ஊழியர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



## வவுனியாவில் மே தின ஊர்வலம்

வவுனியாவில் மாக்சிச லெனினிசக் கட்சியின் மேதின ஊர்வலம் நேற்று இடம்பெற்றது.
(படம்: க. அகரன்)

## கரையோரப் பகுதியில் சரியான இறங்குதுறைகள் இன்மை

■ சுப்ரமணியம் பாஸ்கரன்



யாழ்ப்பாணம், நெடுந்தீவு கிழக்கு கரையோரப் பகுதியில் சரியான இறங்குதுறைகள் இன்மையால், தமது கடற்றொழில் உபகரணங்களை கரைசேர்ப்பதிலும், படகுகளைப் பாதுகாப்பதிலும் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாக பிரதேச கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.


பிடாரி அம்மன் கோவில் முதல் காளவாய் முனை வரையான கரையோரப் பகுதிகளில் கடற்றொழில்களில் ஈடுபட்டு வரும் கடற்றொழிலாளர்கள், இறங்குதுறைகள் இன்றி பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த கரையோரப் பகுதிகளில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

# “பகிரங்க விவாதம் நமக்குள் தேவை”

## ஹக்கீமை அழைக்கிறார் அமைச்சர் நஸீர்

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்





ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டிருக்கும் ரவூப் ஹக்கீம், பகிரங்க விவாதத்திற்கு வரவேண்டும் என சுற்றாடல் அமைச்சரும் ஸ்ரீ முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் அழைத்துள்ளார்.

சம காலத்தினதும் கடந்த காலத்தினதும் விவகாரங்கள் தொடர்பில் சமூகத்துக்கு தெளிவுபடுத்த வேண்டியுள்ளதால் இந்தப் பகிரங்க அழைப்பை விடுப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

நடந்தவற்றை உரியவாறு சமூகத்திடம் ஒப்புவிக்கும் பொறுப்பிலிருந்து நாமிருவரும் நழுவிவிட முடியாது. இதில், யார் குற்றவாளி அல்லது நிரபராதி என்பதையும் எவரது பொறுப்புகள் சமூகக் கடமைகளிலிருந்து நழுவியது என்பதையும் சமூகமே தீர்மானிக்க வேண்டும். இதற்காக ஒரு பகிரங்க விவாதம் நமக்குள் தேவைப்படுகிறது.

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு நான் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரீஸ், பைசல் காசிம், தௌபீக் ஆகியோர் ஆதரவளித்த பின்னணியில், நடைபெற்ற பேச்சுவார்த்தைகள், அவை இடம்பெற்ற இடங்கள், இன்னும் எழுந்தமானமான கதைகளாகவே உள்ளன.

இதன் உண்மைத்தன்மையை சமூகத்திற்கு தெளிவுபடுத்த வேண்டிய தேவை உங்களுக்கும் எனக்கும் உள்ளது. அதுமட்டுமின்றி ஆதாரபூர்வமாகவும் முழு ஆவணங்களுடனும் இந்த விடயங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய கடப்பாடு நமக்கு இருக்கிறது என்றும் நேற்று (01) விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



## பாற்குட பவனி...

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவில் மகா கும்பாபிஷேகத்தை அடுத்து, ஆன்மீக கலாசார பவனியும் பாற்குட பவனியும் வெள்ளிக்கிழமை (29) இடம்பெற்றது. (சகா)



## சேவையை பாராட்டி பிரியாவிடை

■ பைஷல் இஸ்மாயில்

திருகோணமலை, நிலாவெளி கோபாலபுர சித்த ஆயுர்வேத மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றிய சித்த வைத்திய கலாநிதி செ.போல்ரன் றஜீவ் தனது பட்டபின் படிப்பின் பின்னரான இரண்டு வருட வைத்திய பயிற்சி நெறியை பூர்த்தி செய்வதற்காக யாழ். கைதடி சித்த போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றுச்செல்கிறார்.

இந்நிலையில், வைத்தியரின் சேவைகளைப் பாராட்டிய பிரியாவிடை நிகழ்வு சனிக்கிழமை (30) வைத்தியசாலை மண்டபத்தில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.நிரஞ்சன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோரால் நினைவுச் சின்னம், பரிசுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை, மட்டக்களப்பில்

## அரசாங்கத்தை கண்டித்து சு.க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

■ ஒலுமுதீன் கியாஸ், கனகராசா சரவணன்

அரசாங்கத்தின் செயற்பாட்டை கண்டித்து, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, திருகோணமலை, மட்டக்களப்பில் நேற்று (01) எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தது.

திருகோணமலை பொது வாகன தரிப்பிடத்தில் 10.30க்கு ஆரம்பிக்கப்பட்ட போராட்டம், சுமார் 30 நிமிடங்கள் வரையில் நீடித்தது.

சுதந்திர கட்சியின் திருகோணமலை அமைப்பாளர் சோப்பால் கிஷாந்தகுமார தலைமையில் நடைபெற்ற இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில், இலங்கை ஆசிரியர் சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

சுதந்திர கட்சி மூதூர் அமைப்பாளர் எம்.ஏ.பாயிஸ், கந்தளாய் அமைப்பாளர் நளின் குணவர்த்தனவும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

‘இன மத பேதமின்றிய மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்’ என்ற தொனிப்பொருளில் மட்டக்களப்பு ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியினர் காந்தி பூங்காவுக்கு முன்பாக, நேற்று (01) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் குணரட்ணம் கிரிதரன் அழைப்பின் பேரில் வருகை தந்தவர்களே எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

‘கோட்டா வீட்டில் நாங்கள் ரோட்டில்’, ‘விவசாயத்தை விற்றுவிட்டு மன்னிப்பு கேட்பது சரியா’, ‘தொழிலாளர் உரிமை மதிக்கப்படவேண்டும்’, உள்ளிட்ட பதாகைகளையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் ஏந்திநின்றனர்.



## “என் உயிருக்கு அச்சுறுத்தல்”

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

தனது உயிருக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதென, இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தனது வீடுக்கு முன்பாக, பிள்ளையாரடி பிரதான வீதி பகுதியில் கடந்த 25 ஆம் திகதியன்று முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின், தனது பெயருக்கும், அமைச்சுப் பதவிக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில், வார்த்தைப்பிரயோகங்கள் பயன்படுத்தப்பட்டன. இது, பாரிய அச்சுறுத்தலாகும் என்றும் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

கடந்த 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் எனது வீட்டுக்கு முன்பாக இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் என்னை தொடர்பு படுத்தி உண்மைக்கு புறம்பான செய்திகளை பரப்பிவருகின்றனர் என்றார்.

# இ.தொ.காவின் மேதின ஒன்றுகூடல்





இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மேதின ஒன்றுகூடல் கொட்டகலை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது வளாகத்தில் நேற்று (01) நடைபெற்றது. இதன்போது இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த பா.ஜ.க கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் அண்ணாமலை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தின் தொண்டமான் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மலையக இளைஞனின் நடைபயணத்துக்கு

## அமோக வரவேற்பு

## கேகாலையிலிருந்து மற்றுமொருவரும் ஆரம்பித்தார்

■ ஆ.ரமேஸ், ரஞ்சித் ராஜபக்ஷ, என்.ஆராச்சி

அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, கொழும்பு, காலி முகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள 'கோட்டா கோகம' வரையான நடைபயணத்தை சர்வதேச மெய்வல்லுனர் போட்டியில் பதக்கம் வென்ற நடை வீரரான மணிவேல் சத்தியசீலன் என்ற இளைஞர், நேற்று முன்தினம் (30) காலை ஆரம்பித்துள்ளார்.

நுவரெலியா, இராகலை நகரில் காலை 10 மணியளவில் தனது பயணத்தை ஆரம்பித்த இவர், தலவாக்கலை, ஹட்டன், கினிகத்தேனை, அவிசாவளை வழியாக 177 கிலோ மீற்றர் தூரத்தை நடந்து கொழும்பை வந்தடையவுள்ளார்.

உடப்புஸ்சலாவை பகுதியில் இருந்து இராகலைக்கு தனது மனைவியுடன் வருகை தந்த இவர், இராகலை முருகன் கோவில், பள்ளிவாசல், விஹாரை, சந்திரமாதா தேவாலயம் ஆகியவற்றில்



வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர், நடைபயணத்தை மேற்கொண்டார்.

2002ஆம் ஆண்டு நடை போட்டியில் பங்கேற்ற இவர், ஆசியாவில் நடைபெற்ற பல போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

இராகலையிருந்து ஹட்டன் வரையான முதலாவது நாள் நடைபயணத்தின் போது, பிரதான நகரங்களில் இருமருங்கிலும் இருந்து மக்கள் பலத்த வரவேற்பளித்தனர்.

இதேவேளை, இரண்டாம் நாளான நேற்று (01) ஹட்டனிலிருந்து அவிசாவளை வரை தனது பயணத்தை சத்தியசீலன் ஆரம்பித்தார்.

இதேவேளை, சிறுவர் உரிமை செயற்பாட்டாளரான கேகாலையைச் சேர்ந்த தசநாயக்க என்பவரும் சிறுவர்களின் உரிமைகளைக் கோரி, நேற்று முன்தினம் (30) கேகாலையில் இருந்து கொழும்புக்கு நடை பயணத்தை ஆரம்பித்து, நேற்று (01) காலி முகத்திடலை வந்தடைந்தார்.



## சர்வதேச நாணய நிதியத்தை மாத்திரம்

# நாடுவது தீர்வு அல்ல

## மேனகா கந்தசாமி வலியுறுத்து




■ மலைவாஞ்ஞன்

பொருளாதார பிரச்சினையை தீர்ப்பதற்காக எமது அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தை நாடியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தை நாடுவது எமது பிரச்சினைக்கான தீர்வு அல்ல. ஆகக்குறைந்தது பொருளாதார பிரச்சினைக்கான தீர்வும் அல்ல என, இலங்கை செங்கொடி சங்கத்தின் ஆலோசகர் மேனகா கந்தசாமி தெரிவித்தார். மஸ்கெலியாவில் நடைபெற்ற மேதின நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், ஏனென்றால் சர்வதேச நாணய நிதி என்பது, கட்டாயமாகத் தாம் வழங்கும் கடனுக்கு பின்னால் ஒரு பெரிய பொதியை சுமக்க அனுப்பி வைக்கும். அதாவது, இந்த நாட்டில் வழங்கப்படும் கடனை மீண்டும் பெற்று எடுப்பதற்காக எவ்வகையான துறைகளில் செலவைக்குறைத்து வருமானத்தை எவ்வாறெல்லாம் அதிகரிக்கலாமோ அதுதான் முதலாளித்துவ கொள்கை. உச்ச இலாபத்தை அனுபவிக்கக்கூடிய வகையான விடயங்களை அது எங்களுக்கு அனுப்பும்.

அதாவது அவ்வகையான ஒப்பந்தத்தில் நாம் கைச்சாத்திட்டால் மட்டுமே எமக்கு இந்தக் கடன் கிடைக்கும். எனவே, நாம் இந்தக் கடனை எமது பொருளாதார தீர்வாக பார்க்க முடியாது.

இலங்கையில் அதிகமான எண்ணிக்கையில் இருப்பவர்கள் தொழிலாளர்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் அந்தத் தொழிலாளர்களின் உரிமைகள் பல்வேறாக மீறப்பட்டு வருகின்றன. எதிர்வரும் ஆட்சிமுறையில் எமது தொழிலாளர்கள் சார்ந்த தீர்மானம் எடுக்கக்கூடிய தொழிலாளர்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் வரக்கூடிய ஓர் ஆட்சி முறையை அமைக்க வேண்டும். அதற்கான முறைமை உருவாக்கப்பட வேண்டும் என்பதே எமது செங்கொடி சங்கத்தின் வேண்டுகோளாகும்.





# மலையகத்தில் போராட்ட மேதினம்



சர்வதேச தொழிலாளர்கள் தினம் உலகளாவிய ரீதியில் நேற்று (1) அனுஷ்டிக்கப்பட்டது. இலங்கையில், அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்தே தொழிலாளர் தினத்தை அனுஷ்டித்தனர். மலையகத்தில் பல பிரதேசங்களிலும் நேற்று கறுப்புக் கொடிகள் ஏந்தி, போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

(மலையக நிருபர்கள்)



# கினிகத்ஹேனையில் 'கோட்டா கோகம' கிளை

■ ரஞ்சித் ராஜபக்ஷ

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, எரிபொருட்களின் விலையேற்றம், சமையல் எரிவாயுவின் விலை அதிகரிப்பு உள்ளிட்ட பல பிரச்சினைகளை அடிப்படையாக வைத்து, ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக கொழும்பு காலிமுகத்திடலில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 'கோட்டா கோகம'வுக்கு ஆதரவு தெரிவித்து, கினிகத்ஹேனை, களுகல பகுதியில் கிளையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கினிகத்ஹேனை, பொல்பிட்டிய, களுகல ஆகிய பிரதேச இளைஞர்களால் களுகல நகரின் பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் குறித்த 'கோட்டா கோகம' கிளை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# மொட்டு உறுப்பினரின் வீட்டின் மீது கல்வீச்சு

■ சேஹ்றன் செனவிரத்ன

குண்டசாலை பிரதேச சபையின் தவிசாளரின் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட கல்வீச்சு தாக்குதலால் அந்த வீட்டுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக தெல்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் குண்டசாலை பிரதேச சபையின் தவிசாளரான ரஜர அக்மீமன என்பவரது வீடு தெல்தெனிய, கோணவல பிரதேசத்தில் உள்ளது. அந்த வீட்டின் மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள தவிசாளர், "பிரதேச சபையின் தவிசாளர்களை அலரிமாளிகைக்கு பிரதமர் அழைத்திருந்தார். அதில் கலந்துகொண்டு கருத்துகளை முன்வைத்திருந்தேன்.

"இந்த நிலையில், கோணவல சந்தியில் அரசாங்கத்துக்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கைகள் 29ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டிருந்தன. அன்றிரவு 7.30 மணியளவில்

> **இரவு 7.30 மணியளவில் சுமார் 25 பேர் கொண்ட குழுவினர், வீட்டின் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச்சென்றுவிட்டனர்**

சுமார் 25 பேர் கொண்ட குழுவினர் எனது வீட்டின் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச்சென்றுவிட்டனர்" என்றார்.

இந்த விடயம் தொடர்பில் தெல்தெனிய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## தவறவிடப்பட்ட பணப்பை

# உரியவரிடம் கையளிக்கப்பட்டது

■ சுதத்எச்.எம்.ஹேவா

ஹட்டன் பொது வர்த்தக சந்தைப் பகுதியில் தவறவிட்டப்பட்டிருந்த பணப்பையை, அதன் உரிமையாளரிடம் வழங்க ரனாரோ சிவில் பாதுகாப்பு பிரிவின் ஊழியர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி இரவு ரனாரோ பாதுகாப்பு ஊழியர்களிடம் இந்தப் பை கிடைத்துள்ளது.

இதையடுத்து அதனை ஹட்டன்- டிக்கோயா நகர சபையின் தவிசாளர் சடையன் பாலச்சந்திரனிடம் கையளித்து, அந்தப் பையை பரிசோதித்த போது, அதில் 13,840 ரூபாய் பணம், ஆவணங்கள் சில இருந்துள்ளன.

இதனையடுத்து அந்தப் பையில் காணப்பட்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு, நகர சபை தவிசாளரால் பணப்பை உரியவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.



# இலவச கல்விக் கருத்தரங்கு

■ மெய்யன்

பன்விலை பிரதேச செயலக பாடசாலைகளிலுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு நடத்தப்பட்டு வருகின்றது.

பாத்ததும்பர பிரதேச செயலக பிரஜா சக்தி அமைப்பின் மூலம் மாதத்தில் ஒரு சனிக்கிழமை குறித்த கருத்தரங்கு நடத்தப்பட்டு வருவதுடன், இந்த வாரம் பன்விலை விக்னேஸ்வரா தமிழ் மகா வித்தியாலயத்தில் இந்த இலவச கருத்தரங்கு நடைபெற்றது.



# சபதம் எடுக்கமுடியாமல் போராட்டத்துடன் கடந்துசென்ற உழைப்பாளர் தினம்

சிக்காகோ தியாகிகளின் தியாக தினமான ‘மே தினம்’ உழைப்பவர் தினமாக, நேற்று (மே.1) நம்முன் நின்றது. நமது நாட்டைப் பொறுத்தவரையில், தங்களுடைய உரிமைகளுக்காக குரல்கொடுக்க முடியாத நிலைமையொன்றே, தொழிலாளர் வர்க்கத்தினருக்கு ஏற்பட்டிருந்தது. இன்று, நேற்றல்ல, கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் முன்பிருந்தே, இதே நிலைமைதான் நிலவுகின்றது.

தொழிலாளர்கள், அவர்களது ஆற்றலின் தேவையை உணர்த்தவும் போற்றவும் வேண்டி, தொழிலாளர்களின் எழுச்சிமிக்க நாளான மே.1, உண்மையான நோக்கத்திலிருந்து தலைகுப்புறப் புரண்டு, ஆண்டுகள் பல கடந்துவிட்டன. அரசியல் கலப்படத்தால் சபதம் எடுப்பதும் இல்லாதொழிக்கப்பட்டுவிட்டது. தொழிலாளர் தினத்தை, அரசாங்கங்கள் தங்களுடைய பலத்தை காண்பிப்பதற்கே பயன்படுத்திக்கொண்டன.

காலி முகத்திடலில், இம்முறை மேதினத்தை கொண்டாடுவதற்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அரசாங்கம் ஏற்கெனவே தீர்மானித்திருந்தது. எனினும், அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களும் காலி முகத்திடல் போராட்டமும் 23 நாள்களுக்கு மேலாக முன்னெடுக்கப்படுகின்றமையால், அரசாங்கம் மே தினத்தையே மறந்துவிட்டது.

எனினும், சில கட்சிகள் ஆங்காங்கே மே தினத்தை கொண்டாடின. பல இடங்களில் கறுப்பு மே தினமாகவே இருந்தது. தொழிலாளர்களின், உரிமைகளுக்காகக் குரல்கொடுத்து, அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், தொழிற்சங்கங்கள் மே தினத்தை நடத்தும். இம்முறை எல்லாம் தலைகீழாக மாறிவிட்டன.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களால், 2019 ஆம் ஆண்டு மே தினம் தவிர்க்கப்பட்டது. மே தினம் நிறுத்தப்பட்டது, அதுதான் முதற்றடவையல்ல. 1965ஆம் ஆண்டு அரசாங்கம் மே தினத்தைத் தடை செய்தது. 1987ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதியன்று புறக்கோட்டையில் இடம்பெற்ற குண்டுவெடிப்புத் தாக்குதலையடுத்து, மே தினக் கொண்டாட்டங்கள் அவ்வாண்டு தடை செய்யப்பட்டன. 2018ஆம் ஆண்டு மே1 ஆம் திகதி, வெசாக் போயா தினம் என்பதால், மகாநாயக்கர்களின் வேண்டுகோளுக்கிணங்க, ஆறு நாள்களுக்குப் பின்னரே, மே தினக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

தொழிலாளர்களின் எழுச்சியுடன் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் எவையும், இலங்கை அரசாங்கத்தால் கடந்தகாலங்களில் நிறைவேற்றப்படவில்லை. தொழிலாளர்களின் போராட்டங்கள் கூட, இறுதியில் அரசியல் கலந்து, அரசியல் இலாப நோக்கில் நிறைவடைந்துவிட்டமை கடந்தகால கசப்பான வரலாறாகும். இந்த நிலைமை, இன்னுமே நீடித்துக்கொண்டுதான் செல்கின்றது.

நாடு முகம்கொடுத்துக்கொண்டிருக்கும் மிக இக்கட்டான நெருக்கடிமிக்க சூழலில், அரசாங்கத்துக்கு அழுத்தம்கொடுக்கும் போராட்டங்கள், நாளுக்கு நாள் அதிகரித்துவிட்டன. பௌத்த பீடங்களும் அரசாங்கத்தை எச்சரித்துள்ளன. அந்தளவுக்கு நிலைமை மோசமடைந்து செல்கின்றது.

வங்குரோத்து நிலைமைக்குள் நாடு சென்றுள்ளமையால், அதிலிருந்து மீண்டெழுவதற்கான தீர்மானங்களை அதிரடியாக எடுக்கவேண்டும். பௌத்த பீடங்கள் கடிந்துகொள்ளும் அளவுக்கு அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. ஆக, தட்டுப்பாடான பொருட்கள், மக்களுக்கு தாராளமாக கிடைக்குமாயின், போராட்டங்கள் ஓய்துவிடுமென அசட்டையாக நிற்காது, அதிரடியாக முடிவை எடுக்கவேண்டும்.




## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

மக்களில் பலரும் சுதந்திரம் என்பது எது, சுதந்திரம் இன்மை என்பது எது எனத் தெரியாமலேயே வாழ்கின்றார்கள். வீடு, கொஞ்சம் பணம், உணவு என்று வசதிகள் பெரிதும் இல்லாதவர்கள், எவ்வித சிந்தனையும் இன்றி இருக்கிறார்கள்.

எந்த அரசாங்கம் வந்தது, அவர்கள் என்ன செய்தார்கள் என்பது புரிவதில்லை. எல்லா ஆளும் கட்சிகளும் சொன்னவற்றைச் செய்வதில்லை.

இவ்விடயத்தில், பெரும்பான்மை, சிறுபான்மை என்கிற பேதம் கிடையாது. முன்னேறியுள்ள நாடுகள் போல, ஏன் எங்களால் மாறமுடியவில்லை எனக் கேள்வி கேட்பதுமில்லை.

எமது நாடு சகல வளங்களும் கொண்டது. ஆனால், ஏன் பொருளாதார சுபீட்சம் காண முடியாமல் இருக்கின்றது? அபிவிருத்தி அடைந்த நாடுகளில், பெரும்பான்மை, சிறுபான்மை என பேதங்கள் இல்லை; எல்லோருக்கும் உரிமைகள் ஒன்றுதான். ஆனால், எமது நாட்டில், இனம், மதம், மொழி பேதங்கள் இருப்பதால் முன்னேறத்துக்கு தடையாய் இருக்கின்றது. பொருளாதாரம் மேம்படல் வேண்டும். யுத்தம், போராட்டம், வேலைநிறுத்தம், கடன்பெறுதல் இருந்தால், எப்படி நாடு செழிக்கும்? சிந்திக்கச் செயல்பிறக்கும்..

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ‘நாடகம் விடும் நேரம்தான் உச்ச காட்சி நடக்குதம்மா’



என்.கே. அஷோக்பரன்

மஹிந்த ராஜபக்‌ஷவை பிரதமர் பதவியிலிருந்து விலகச்செய்துவிட்டு, எல்லாக் கட்சிகளில் இருந்தும் ஆதரவைப் பெற்று, ஓர் அரசை அமைக்க, ஜனாதிபதி கோட்டா துடித்துக்கொண்டிருப்பதை அறிக்கைகள் சுட்டி நிற்கின்றன.

மறுபுறத்தில், “நான் ஒருபோதும் பிரதமர் பதவியிலிருந்து விலகப்போவதில்லை; வேண்டுமானால் என்னைப் பதவி நீக்கவும்” என வெளிப்படையாகவே சவால் விட்டிருக்கிறார் மஹிந்த.

ஏற்கெனவே பசில், சமல், நாமல் ஆகிய ராஜபக்‌ஷர்கள், தங்கள் அமைச்சரவைப் பதவிகளிலிருந்து விலகியுள்ள நிலையில், இன்றைய அமைச்சரவையைப் பொறுத்தவரையில் கோட்டாவும் மஹிந்தவும் ஆகிய இரண்டு ராஜபக்‌ஷர்கள் மட்டுமே அமைச்சரவையில் அங்கம் வகிக்கிறார்கள். இதில் மஹிந்தவையும் விலக்கிவிட்டால், கோட்டாவைத் தவிர வேற எந்தவொரு ராஜபக்‌ஷவும் அமைச்சரவையில் இடம்பெறமாட்டார்.

மறுபுறத்தில், எதிர்த்துக்கொண்டு நிற்கும் எதிர்க்கட்சிகளையெல்லாம் ஒன்றிணைத்து ஆட்சி அமைத்துவிட்டால், தனது பதவியைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்று கோட்டா சிந்திக்கலாம்.

மக்கள் எதிர்ப்பு, ராஜபக்‌ஷர்களுக்கு எதிராகக் கடுமையாகக் கிளர்ந்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், மற்ற ராஜபக்‌ஷர்கள் வேறு; நான் வேறு என்று காட்டி, பிழைகளுக்கான பழியை மற்றவர்கள் மீது சாட்டிவிட்டு, கோட்டா தன்னை வேறுபடுத்தி, நல்லவனாகக் காட்ட விளைகிறாரோ?

கோட்டா, அடிப்படையில் ஓர் அரசியல்வாதி இல்லை. கோட்டாவின் மிக நெருங்கிய வட்டம், அரசியல்வாதிகளால் ஆனது அல்ல. மஹிந்த, பசில், நாமல், சமல் ஆகியோரின் அரசியல் வட்டத்திலிருந்து, கோட்டாவின் அரசியல் வட்டமும் வேறுபட்டது. ஆகவே, இன்று கோட்டா உட்பட ராஜபக்‌ஷர்களுக்கு எதிராகத் திரும்பியிருக்கும் மக்கள் எதிர்ப்பிலிருந்து கோட்டாவைக் காப்பாற்ற, கோட்டாவின் வட்டம் கையிலெடுத்திருக்கும் புதிய முயற்சிதான் இந்த மாற்றமோ என்ற எண்ணம் எழுவதும், தவிர்க்க முடியாதது.

அப்படியானால், இந்த இடத்தில் எழும் முக்கிய கேள்வி, ராஜபக்‌ஷ குடும்பத்துக்குள் உடைவு ஏற்பட்டுவிட்டதா என்பதே!

‘குடும்பம்தா’ன் ராஜபக்‌ஷர்களின் பலமும் பலவீனமும். இதுவரைகாலமும் பலமே விஞ்சிநின்ற குடும்பம்; இன்று பலவீனம் விஞ்சி நிற்கிற நிலைக்கு வந்தவுடன், குடும்பத்தை கைவிடும் நடவடிக்கையை கோட்டா செய்கிறாரோ என்ற எண்ணம் எழுவது இயல்பானதே.

“குடும்ப ஆட்சி” என்ற குற்றச்சாட்டுத்தான் ராஜபக்‌ஷர்களுக்கு எதிராக முன்வைக்கப்படும் முக்கிய குற்றச்சாட்டுகளில் ஒன்று. தான் நினைத்தபடி ஆட்சியை நடத்தமுடியாத நிலை ஏற்பட்டதற்குக் காரணம், தனது குடும்பத்தினரின் தலையீடுதான் என்று கோட்டா நம்புவாராக இருந்தால், அது முழுமையாக மறுக்கப்பட முடியாது. எனினும், இன்றைய ஆட்சிப்பிழைகளுக்கு கோட்டா தன்னுடைய பங்கினை மறுத்துவிட முடியாது.

இரவோடிரவாக இரசாயன உரத்தை தடைசெய்யும் அடிமுட்டாள்தனமான முடிவை யார் எடுத்தது? இலங்கையின் பொருளாதாரத்தை அதளபாதாளத்தில் தள்ளிய முடிவுகளை எடுத்த மத்திய வங்கி ஆளுநர்களான டபிள்யூ.டீ.லக்‌ஷ்மன், அஜித் நிவாட் கப்ரால் ஆகியோரை, அந்தப் பதவிக்கு நியமித்தது யார்? நிறைவேற்று அதிகாரம் யார் கையில் இருக்கிறது? ஆகவே, தனது குடும்ப உறுப்பினர்களின் மீது பழியைப் போட்டுவிட்டு, கோட்டா அவ்வளவு இலகுவாக பொறுப்புத்துறப்பு செய்துவிட முடியாது.

இது அரசியல்; இவர்கள் அரசியல்வாதிகள். இவர்களின் செயல்களை மேலோட்டமாகப் பார்க்காது, ஆழமாகப் பார்க்க வேண்டியது அவசியம் என்று சிலர் எண்ணலாம். ஆகவே, மேலோட்டமாக நடப்பதை மட்டும் அவதானிக்காது, இன்னொரு வகையில் சிந்தித்தால், இன்று ஏற்பட்டிருக்கும் ராஜபக்‌ஷ எதிர்ப்பலையை அடக்க, உண்மையில் அதிகாரங்கள் நிறைந்த ஜனாதிபதி ராஜபக்‌ஷவைத் தவிர, மற்றைய ராஜபக்‌ஷர்களை அரசாங்கத்திலிருந்து விலத்தி வைத்துவிட்டால், ராஜபக்‌ஷர்களுக்குள்ளேயே ஒரு முரண்பாடு இருக்கிறது என்ற தோற்றப்பாட்டை உருவாக்கிவிட்டால், ராஜபக்‌ஷர்களுக்கு எதிரான அலை அடங்கிவிடும்; அல்லது, திசைதிரும்பிவிடும் என்ற திட்டத்தின்படியே, ‘ராஜபக்‌ஷ குடும்பம் உடைந்துவிட்டது’ என்ற விம்பம் கட்டமைக்கப்படுகிறதோ என்ற எண்ணம் எழுகிறது! ஆனால், இதற்காக தன்னையும் தனது பெயரையும் மதிப்பையும் பலிகொடுக்க, மஹிந்த தயாரா என்பதுதான் இங்கு முக்கிய கேள்வி.

கோட்டா, மஹிந்தவை பதவி நீக்குவது நாடகமா, இல்லையா என்பதை அறிவதற்கு ஒரு வழி இருக்கிறது. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுணவின் தலைவர் மஹிந்ததான். அந்தக் கட்சி பசிலின் கட்டுப்பாட்டில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. கட்சி முடிவையும் கட்டுப்பாட்டையும் மீறி, பாராளுமன்ற உறுப்பினர்களான கட்சி உறுப்பினர்கள் செயற்பட்டால், அவர்களைக் கட்சியிலிருந்து நீக்க முடியும். அப்படி முறையாக நீக்கப்பட்டால், அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் இழப்பார்கள். இது நடந்தால், இந்த முரண்பாடு உண்மையில் பாரதூரமானது என்பதைப் புரிந்துகொள்ளலாம். இல்லையென்றால், இந்த முரண்பாட்டின் உண்மைத்தன்மை கேள்விக்குட்படுத்தப்படும்.

எது எவ்வாறாயினும், இது எல்லாம் ஒரே ஒரு விஷயத்தைச் சுட்டி நிற்கிறது. ‘கோ ஹோம் கோட்டா’, ‘கோ ஹோம் ராஜபக்‌ஷஸ்’ போராட்டங்கள் ராஜபக்‌ஷர்களை நிலைகுலையச் செய்துள்ளது. ‘ராஜபக்‌ஷர்கள்’ என்ற, பெரும் பகீரதப் பிரயத்தனங்களால் கட்டியெழுப்பப்பட்ட விம்பம், தனது மதிப்பை இழந்துபோய் இருக்கிறது.

‘கோ ஹோம் கோட்டா’, ‘கோ ஹோம் ராஜபக்‌ஷஸ்’ போராட்டங்களின் பெரும் வெற்றி என்பது, ஊதிப்பெருப்பிக்கப்பட்டிருந்த ‘ராஜபக்‌ஷ’ விம்பங்களை, ஓர் ஊசி நுனியின் சிறு அழுத்தத்தில் பலூன் வெடிப்பதைப் போல, ஒன்றும் இல்லாததாக்கியதுதான். உச்சரிக்கவே பலரும் அஞ்சிய ‘கோட்டா’ எனும் பெயர், “கோட்டா கொப்பயா” என தூசிக்கப்படுகிறது.

ராஜகம்பீரத்துடன் “மஹ ரஜானனீ” என்று பாடல்பாடிப் புகழப்பட்ட மஹிந்த, ‘நாக்கி மைனா’ (கிழட்டு மைனா) ஆனார். பசிலைப் பொறுத்தவரையில், அன்று மிஸ்டர் 10%, இன்று ‘கபுடா’ (காகம்). ஆகவே அதில் பெரிய மாற்றமில்லை. நாமல் இன்று, ‘பேபி மைனா’ ஆகியிருக்கிறார்!

இது எல்லாம், ராஜபக்‌ஷர்கள் கனவிலும் எதிர்பார்த்திராத நிலை. தாம் இப்படி ஓர் அசிங்கத்தை, அவமானத்தைச் சந்திப்போம் என்று கோட்டாவோ, மஹிந்தவோ கனவு கூட கண்டிருக்க மாட்டார்கள். தனது அரசியல் எதிர்காலம் பற்றிய அச்சமும் கவலையும், நாமலுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதனால், என்ன செய்வது என்று தெரியாமல், சமூக ஊடகங்களில் சில உளறல்களையும் பதிவுசெய்து வருகிறார். நிற்க!

இந்த நாடகத்தின் உச்சக்காட்சி, இந்தவாரம் இடம்பெறும் என்று எதிர்பார்க்கலாம். ஒன்றில் கோட்டா, மஹிந்தவை பிரதமர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, தான் பல கட்சிகளையும் ஒன்றிணைத்த அரசாங்கமொன்றை அமைக்கலாம்

அப்படியானால், அதில் பிரதமர் யார் என்ற கேள்வி எழுகிறது. பிரதமர் என்பது, இன்றைய நிலையில், ஒரு மதிப்பு மிக்க ‘டம்மி’ (பொம்மை); அவ்வளவுதான்! ஆனால், மதிப்பு மிக்க ‘டம்மி’யாக இருப்பதற்கு, இங்கு நிறைய கேள்விகள் இருக்கின்றன.

அல்லது, கோட்டாவும் மஹிந்தவும் ஒரு சமரசத்துக்கு வந்து, மஹிந்த பிரதமராகத் தொடர்ந்து கொண்டு, பல கட்சிகளையும் ஒன்றிணைத்த அரசாங்கமொன்றை அமைக்கலாம். ஆனால், அதற்கு பல கட்சிகளும் சம்மதிக்குமா என்பது சந்தேகமே.

எல்லாவற்றையும் விட, இதில் எது நடந்தாலும், அது களத்திலிறங்கிப் போராடும் மக்களையும் அவர்களது கோரிக்கைகளையும் திருப்தி செய்யுமா என்பது மிக முக்கிய கேள்வி.


இந்த இடத்தில், இன்னொரு முக்கிய கேள்வியும் எழுகிறது. இங்கு பல கட்சிகளையும் ஒன்றிணைத்த அரசாங்கம் என்று முன்மொழியப்படுவதில், அங்கம் வகிக்கப் போகும் கட்சிகள் எவை? ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியில் போட்டியிட்டு பாராளுமன்றம் சென்று, அரசாங்கத்தில் அங்கம் வகித்து, பிறகு பதவி நீக்கம் செய்யப்பட்ட, மற்றும் அரசாங்கத்தை விட்டு விலகிய உதய கம்மன்பில, விமல் வீரவன்ச, மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினரை உள்ளடக்கியதுதான் இந்தப் புதிய அரசாங்கமா? அப்படியானால், இதற்கும், இதற்கு முன்னிருந்த அரசாங்கத்துக்கும் கட்சிக்கட்டமைப்பு ரீதியில் என்ன வித்தியாசம்?

மறுபுறத்தில், ஐக்கிய மக்கள் சக்தி கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளிலிருந்து, எவரேனும் இந்த அரசாங்கத்தில் இணைந்துகொள்ளப் போகிறார்களா? அப்படியானால், அதனை மக்கள் எப்படிப் புரிந்துகொள்வது? பதவிக்காக கட்சிமாறிவிட்டார்கள் என்றா?

நிறையக் கேள்விகள் தொக்கி நிற்கின்றன. இந்தவாரம், இதில் சிலவற்றுக்கேனும் பதில் கிடைக்கும் என நாம் எதிர்பார்க்கலாம்.

## கடிதங்கள்

### வலி. வடக்கில் பொதுமக்களுக்கு
### இடையூறாக கொட்டப்படும் மருத்துவக் கழிவுகள்



யாழ். வலிகாமம் வடக்கு பிரதேச சபையால், கழிவுகள் கொட்டப்படும் பகுதியில் ஆபத்தான மருத்துவ கழிவுகளும் கொட்டப்படுவதாக பிரதேச மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

பிரதேச சபை மற்றும் சுகாதாரத்துறைக்கு தெரிந்தே இந்தப் பொறுப்பற்ற செயற்பாடு நடப்பதாகச் சாடியுள்ள மக்கள், வலி. வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் சேகரிக்கப்படும் கழிவுகள், நல்லிணக்கபுரத்தை அண்மித்ததாகவுள்ள மண் அகழப்பட்ட குழிகளில் கொட்டப்படுகின்றன.

சாதாரண கழிவுகளுடன் வைத்தியசாலையில் பயன்படுத்தப்பட்ட ஊசிகள், இரத்தம் ஏற்றப் பயன்படுத்தப்பட்ட குழாய்கள், சேலைன் போத்தல்கள் என்பவற்றை, மக்கள் குடிமனையை அண்மித்த பகுதிகளில் பொறுப்பற்ற விதமாக கொட்டப்பட்டுவது, எதிர்காலத்தில் பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவக் கழிவுகளை அகற்றுவதற்கு பிரத்தியேக பொறிமுறைகள் உள்ள நிலையில், கழிவுகளை முகாமை செய்யாமல், நிலத்தடி நீர்வளத்தையும் சுற்றாடலையும் பாதிக்கும் வகையில் மருத்துவ கழிவுகளைக் கொட்டுவது, எந்த வகையில் நியாயம் என இப்பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

ஆகவே, பொறுப்பு வாய்ந்தவர்கள் இனியாவது தமது பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

–நிதர்சன் வினோத்

இலங்கை குத்துச்சண்டை சம்மேளனத்துக்கு

# SLT–MOBITEL அனுசரணை

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகள் வழங்குநரான SLT-MOBITEL, இலங்கை குத்துச் சண்டை சம்மேளனத்துக்கு பிரதான அனுசரணை வழங்க முன்வந்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் இடம்பெறவுள்ள வருடாந்த பிரதான நிகழ்வுகளுக்கான அனுசரணையை SLT-MOBITEL வழங்கும். அண்மையில் இடம்பெற்ற Layton கிண்ண குத்துச் சண்டை போட்டிகள், 2022 இன் போது இந்த அறிவிப்பு மேற்கொள்ளப்பட்டது.

பிரதான அனுசரணை ஒரு வருட காலத்துக்கான ஒப்பந்தத்தைக் கொண்டிருப்பதுடன், குத்துச் சண்டை சம்மேளனத்தின் வருடாந்த நாட்காட்டியில் மூன்று பிரதான நிகழ்வுகளுக்கு SLT-MOBITEL பிரதான அனுசரணையை வழங்கும். ஆண், பெண் குத்துச் சண்டை அணிகளுக்கு முழு ஆதரவை வழங்க SLT-MOBITEL முன்வந்துள்ளதுடன், போதியளவு விருத்தி மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புகளையும் பெற்றுக் கொடுக்கும். இதனூடாக, சகல விளையாட்டு வீரர்களுக்கும் உள்நாட்டு மற்றும் சர்வதேச போட்டிகளில் சிறப்பாக தமது திறமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்கும்.

ஸ்ரீ லங்கா டெலிகொம் பிரதான சந்தைப்படுத்தல் அதிகாரி பிரபாத் தஹநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், “நிறுவனம் எனும் வகையில், நாட்டின் பிரதான விளையாட்டுகளுக்கு ஆதரவளித்து வருகின்றோம். கடந்த காலங்களில் குத்துச் சண்டைப் போட்டிகளில் இலங்கை குத்துச் சண்டை சம்மேளனம் சிறந்த பெறுபேறுகளைப் பதிவு செய்திருந்தது. இந்த விளையாட்டு பதிவு செய்துள்ள முன்னேற்றத்துடன், எமது ஆதரவும் கிடைப்பதனூடாக, இந்தச் சம்மேளனத்துக்கு மேலும் வளர்ச்சியை பதிவு செய்து, இலங்கைக்கு எதிர்காலத்தில் மேலும் பெருமையை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்” என்றார்.

SLT-MOBITEL அனுசரணையின் கீழ் இலங்கை குத்துச் சண்டை சம்மேளனத்தால், இலங்கை குத்துச் சண்டை தேசிய சம்பியன்ஷிப், Layton கிண்ணம், Clifford கிண்ணம் ஆகியவற்றை முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும்.




இலங்கையின் குத்துச் சண்டை நாட்காட்டியில் முக்கியத்துவம் வாய்ந்த போட்டியாக Layton கிண்ணம் 2022 அமைந்திருந்தது. இதில் போட்டியிட்ட வீரர்கள், 2022 ஜூன் மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய போட்டிகளில் பங்கேற்பதற்கு பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டனர்.

இலங்கை குத்துச்சண்டை சம்மேளனத்தின் தலைவர் டியன் கோமஸ் குறிப்பிடுகையில், “இலங்கையில் குத்துச் சண்டை போட்டிகளை ஊக்குவிப்பதில் SLT-MOBITEL முழு ஆதரவை வழங்குவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். சம்மேளனத்தின் நிபுணத்துவமான வழிமுறை மற்றும் கடின உழைப்பு ஆகியன தொடர்ச்சியாக முன்னேற்றத்தை பதிவு செய்துள்ளதுடன், விளையாட்டு உயர்ந்த ஸ்தானத்துக்கு செல்வதை உறுதி செய்கின்றது. எமது இளைஞர்கள் மத்தியில் குத்துச் சண்டைப் போட்டிகள் தொடர்பில் பிரபல்யத்தை ஏற்படுத்தி, நேர்த்தியான தாக்கத்தை ஏற்படுத்துவதாக SLT-MOBITEL இன் அனுசரணை அமைந்திருக்கும் என்பதில் இலங்கை குத்துச் சண்டை சம்மேளனம் நம்பிக்கை கொண்டுள்ளதுடன், இந்தப் பங்காண்மையை மேலும் முன்னேற்றுவது தொடர்பில் நாம் கவனம் செலுத்துகின்றோம்” என்றார்.

# DFCC வங்கியின் மற்றுமொரு ATM/CRM

DFCC வங்கி, தனது 25 ஆவது வெளியக ATM/CRM ஐ பனாகொட, டெம்பிள்பேர்க் தொழிற்பேட்டை வளாகத்தில் அறிமுகம் செய்துள்ளது. இந்த அறிமுக நிகழ்வில் வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டதுடன், டெம்பிள்பேர்க் தொழிற்பேட்டையைச் சேர்ந்த அதிகாரிகளும் தெரிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர்களும் அடங்கியிருந்தனர். இந்த வலயத்தில் 34 நிறுவனங்கள் மற்றும் 5,000 க்கும் அதிகமான ஊழியர்கள் காணப்படும் நிலையில், இந்த அமைவிடத்திலிருந்து 3 கிலோ மீற்றர் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கும் அனுபவிக்கக்கூடிய வகையில் இந்த ATM/CRM சேவை அமைந்துள்ளது. நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய தேவை இல்லாமல் செய்யப்பட்டுள்ளதுடன், சௌகரியமான முறையில் தமது டிஜிட்டல் நிதிச் சேவைகளை பொது மக்களுக்கு பெற்றுக் கொள்ளக்கூடிய வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வெளியக ATM/CRM வசதி நிறுவப்பட்டுள்ளமை தொடர்பில் வாடிக்கையாளர் மற்றும் சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாளர் வங்கிச் சேவைகள் பிரிவின் தலைமை அதிகாரியும் சிரேஷ்ட உப தலைவருமான ஆசிரி இத்தமல்கொட கருத்துத் தெரிவிக்கையில், “டெம்பிள்பேர்க் தொழிற்பேட்டையில் 34 நிறுவனங்கள் காணப்படுவதுடன், அதில் ஆயிரக்கணக்கானவர்கள் பணியாற்றுகின்றனர். நிதிச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதிலும், பணச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதிலும் பலர் பல்வேறு விதமான அசௌகரியங்களை எதிர்நோக்குவதை நாம் புரிந்து கொண்டோம். மேலும், வங்கிச் சேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இந்த ஊழியர்கள் குறுகிய விடுமுறையைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை காணப்பட்டமை தொடர்பிலும் எமது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. எனவே, அனைவருக்குமான வங்கிச் சேவைகளை வழங்கும் வங்கி எனும் வகையில், டிஜிட்டல் மற்றும் பண வங்கிச் சேவைகளை சௌகரியமான முறையில்வழங்குவது மாத்திரமன்றி, 2030 ஆம் ஆண்டுக்கான எமது நிலைபேறாண்மை இலக்குகளின் பிரகாரம், நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்பையும் நாம் அவதானித்திருந்தோம். எனவே, இந்த வலயத்தைச் சேர்ந்த நிறுவனங்கள் மற்றும் ஊழியர்களுக்கும், இப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கும் வலுவூட்ட முடிந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். எமது புதிய வெளியக பண வைப்பு ஆற்றலுடனான ATM மற்றும் டிஜிட்டல் கொடுப்பனவு kiosk ஆன Pay & Go ஆகியன அவர்களுக்கு பயனளிப்பதாக அமைந்திருக்கும். எமது முன்னணி பரிபூரண டிஜிட்டல் பண முகாமைத்துவ தீர்வான DFCC iConnect மற்றும் இதர சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைக்கான வங்கியியல் தீர்வுகள் போன்றவற்றினூடாக வியாபாரங்களுக்கு நாம் கைகொடுத்த வண்ணமுள்ளோம்” என்றார்.

DFCC வங்கியின் புதிய வெளியக வசதிகளில், நவீன வசதிகள் படைத்த CRM இயந்திரமும் அடங்கியுள்ளது. இதனூடாக வாடிக்கையாளர்களுக்கும் பொது மக்களுக்கும் எந்தவொரு வங்கிக் கணக்கிலிருந்தும் பணத்தை மீளப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன், DFCC வங்கிக் கணக்குகளுக்கு பண வைப்புகளை மேற்கொள்ளவும் முடியும். மேலும், DFCC வாடிக்கையாளர்களுக்கு கார்ட் மற்றும் கார்ட் இல்லாத கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் வசதியும், DFCC கடனட்டைகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. CRM இயந்திரத்துக்கு மேலதிகமாக, DFCC வங்கியால் Pay and Go இயந்திரமொன்றும் நிறுவப்பட்டுள்ளதுடன், அதனூடாக பொது மக்களுக்கு இலகுவான முறையில் டிஜிட்டல் மொபைல் ரீலோட்கள், கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகள், காப்புறுதி, லீசிங் போன்ற நிறுவனசார் கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும் முடியும். மொபைல் ரீலோட் வசதியினூடாக, சகல வலையமைப்பு சேவை வழங்குநர்களின் இணைப்புகளுக்கும் ரீலோட் செய்து கொள்ள முடியும் என்பதால், பணியாளர்களுக்கு பெரும் சௌகரியமானதாக அமைந்துள்ளது. அருகாமையிலுள்ள ரீலோட் செய்யும் நிலையம், இந்த வலயத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தொலைவில் அமைந்திருப்பதால், இந்த வசதி அவர்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

வலயத்தைச் சேர்ந்த பணியாளர்கள் மற்றும் ஏனையவர்களுக்கு தற்போது DFCC வங்கியின் Salary Partner அல்லது Salary Plus போன்ற சம்பளக் கணக்குகளை இலகுவாக ஆரம்பித்துக் கொள்ள முடியும்.



ஆந்திரா

# அரசியல் பிரமுகரை அடித்து விரட்டிய பொதுமக்கள்

ஆந்திராவில் மரண வீடொன்றுக்குச் சென்ற எம்.எல்.ஏ வை பொதுமக்கள் அடித்து விரட்டிய சம்பவம் ஆந்திராவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆந்திராவில், கோபாலபுரம் தொகுதியைச் சேர்ந்த தலரி வெங்கட்ராவ் என்ற எம்.எல். ஏ தனது கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரின் மரண வீட்டிற்கு நேற்று முன்தினம் சென்றுள்ளார்.

அப்போது அங்கு குவிந்த பொதுமக்கள் எம்.எல்.ஏ வெங்கட்ராவைத் தடுத்து நிறுத்தியதோடு, குறித்த நபரின் மரணத்திற்கும் வெங்கட்ராவுக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிவித்து அவரை அங்கிருந்து அடித்து விரட்டியுள்ளனர்.

அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த பொலிஸார், மக்களிடம் இருந்து எம்.எல்.ஏ வெங்கட்ராவைப் பாதுகாப்பாக மீட்டு சென்றனர்.



பூனே

# சடலத்தின் மீது பெட்ரோல்
## ஊற்றியதால் விபரீதம்

மராட்டிய மாநிலம், பூனே மாவட்டம், தடிவாலா பகுதியை சேர்ந்த 80 வயதான தீபக் கும்ளே என்பவரது சடலத்தை தகனம் செய்ய, இடுகாட்டிற்கு கொண்டு சென்றனர்.

தகன மேடையில் வைத்து, சடலத்துக்கு எரியூட்டப்பட்டது. எனினும், உடல் சரியாக எரியாததை அவதானித்த அங்கிருந்தவர்களில் ஒருவர், எரிந்துகொண்டிருந்த சடலத்தின் மீது பெட்ரோலை ஊற்றிவிட்டார்.

அதிலிருந்து எழுந்த தீ வேகமாகப் பரவியதில், 11 பேர், கடும் தீக்காயங்களுக்கு உள்ளாகினர்.



மும்பை

# ‘போர் முலா 1’ காரில் பால் விற்பனை

மும்பையில் பால் வியாபாரி ஒருவர் ‘போர்முலா 1’ (Formula 1) கார் போன்று தோற்றமளிக்கக் கூடிய காரொன்றைத் தனது சொந்த முயற்சியில் உருவாக்கி, அதில் பால் விற்பனை செய்துவரும் வீடியோவொன்று இணையத்தில் வைரலாகி வருகின்றது.

குறித்த வீடியோவில் ”கறுப்பு உடை மற்றும் தலைக்கவசம் அணிந்த அந்நபர் கொள்கலன்களில் நிறப்பப் பட்ட பாலை விற்பனை செய்து வருவதைக் காணலாம்.

இவ் வீடியோவினை இதுவரை லட்சக்கணக்கான மக்கள் பார்வையிட்டுள்ளதோடு, ஆயிரக்கணக்கான மக்கள் அதனை லைக் செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இணையவாசிகள் பலர் மஹிந்திரா குழுமத்தின் தலைவர் ஆனந்த் மஹிந்திராவின் வீடியோவைப் பார்த்து அவருக்கு ஒரு காரை பரிசளிக்குமாறு பரிந்துரை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் குறித்த பால் வியாபாரி யார் என்பது குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை.



உத்தர பிரதேசம்

# பணியில் இணைந்த முதல் நாளே தன் உயிரை மாய்த்த தாதி

உத்தர பிரதேசம் மாநிலம், உன்னாவ் மாவட்டத்தின் பங்கர்மாவ் பகுதியில் முதியோர் இல்லமொன்று உள்ளது.

இந்நிலையில் குறித்த முதியோர் இல்லத்தில் நேற்று முன்தினம்(30) தாதியாகப் பணியில் இணைந்த யுவதியொருவர் நேற்றைய தினம் அதே முதியோர் இல்லத்தில் தூக்கில் தொங்கி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் குறித்த யுவதியின் சடலத்தை மீட்டு பிரதேச பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

இதற்கிடையே, தனது மகள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொல்லப்பட்டதாகவும், இதன் பின்னணியில் முதியோர் இல்லத்தின் மேலாளர் இருப்பதாகவும் இறந்தவரின் தாய் குற்றம்சாட்டினார்.

இந்நிலையில், பிரேத பரிசோதனை அறிக்கையில் கற்பழிக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.




இருப்பினும், தாய் அளித்த புகாரின்பேரில் பல்வேறு பிரிவுகளின் கீழ், மூன்று பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிரா

# கொண்டாட்டத்தில் மகாராஷ்டிரா மக்கள்

1960ஆம் ஆண்டு மே 1ஆம் திகதி மகாராஷ்டிரா மாநிலம் உருவாக்கப்பட்டது. இதனை முன்னிட்டு ஆண்டுதோறும் மே மாதம் 1 ஆம் திகதி அம்மாநில மக்களால் ‘மகாராஷ்டிரா தினம்’ கொண்டாடப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் நேற்றைய தினம் இடம்பெற்ற மகாராஷ்டிரா தினக் கொண்டாட்டத்தின் போது மும்பை தலைமைச் செயலகமான மந்த்ராலயா மற்றும் பிர்ஹன்மும்பை முனிசிபல் கோர்பரேஷன் உள்ளிட்ட கட்டடங்கள் மூவர்ண நிறத்தில் ஒளியூட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



நெல்லை

மாணவன் உயிரிழப்பு:

# 3 மாணவர்கள் கைது; ஆசிரியர்கள் இடைநீக்கம்

நெல்லை மாவட்டம், முக்கூடல் அருகே உள்ள அரச பாடசாலையொன்றில் இரு மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரழந்தார்.

11ஆம் தரம் மற்றும் 12 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களிடையே ஏற்பட்ட வாக்குவாதமே இம்மோதலுக்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் போது 12 ஆம் தர மாணவனான செல்வ சூர்யாவை, எதிர்த்தரப்பைச் சேர்ந்த மாணவர்கள் மூவர் கற்களால் தலையில் பலமாகத் தாக்கியதால் படுகாயங்களுக்குள்ளான செல்வ சூர்யா, சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (30)அதிகாலை உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், இச்சம்பவம் தொடர்பில் 11ஆம் தர மாணவர்கள் 3 பேர் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இவ்வழக்கானது கொலை வழக்காக மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேலும் தீவிர விசாரணைக்கு பிறகு மாணவர்கள் 3 பேரும் கைது செய்யப்பட்டனர் எனவும், இதன்போது பாடசாலை உடற்கல்வி ஆசிரியர்கள் இருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஸ்பானிய லா லிகா தொடர்:

# சம்பியனான றியல் மட்ரிட்

ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில் றியல் மட்ரிட் சம்பியனானது.

தமது மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அஸ்பன்யோலுடனான போட்டியில் 4-0 என்ற கோல் கணக்கில் வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் நான்கு போட்டிகள் இருக்கத் தக்க நிலையிலேயே றியல் மட்ரிட் சம்பியனாகியுள்ளது.

றியல் மட்ரிட் சார்பாக, றொட்றிகோ இரண்டு கோல்களையும், மார்கோ அஸென்ஸியோ, கரிம் பென்ஸீமா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர்.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் 81 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் றியல் மட்ரிட் காணப்படுகின்ற நிலையில், இரண்டாமிடத்தில் காணப்படுகின்ற செவிய்யா 64 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலுள்ளது. அந்தவகையில் அடுத்த நான்கு போட்டிகளிலும் வென்று 12 புள்ளிகளைப் பெற்றாலும் 76 புள்ளிகளையே செவிய்யா பெற முடியும். இதேவேளை, ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ள பார்சிலோனா ஐந்து போட்டிகளில் வென்றாலும் 15 புள்ளிகளையே பெற்று அதிகபட்சமாக 78 புள்ளிகளையே பெற முடியும்.



ஜேர்மனிய புண்டெலிஸ்கா தொடர்:

# தோற்ற மியூனிட், டொட்டமுண்ட்

ஜேர்மனியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான புண்டெலிஸ்கா தொடரில், நேற்று முன்தினமிரவு நடைபெற்ற போட்டிகளில் நடப்புச் சம்பியன்களான பயேர்ண் மியூனிச், பொரூசியா டொட்டமுண்ட் ஆகியன தோற்றுள்ளன.

மைன்ஸின் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் 1-3 என்ற கோல் கணக்கில் மியூனிச் தோற்றிருந்தது. மியூனிச் சார்பாகப் பெறப்பட்ட கோலை றொபேர்ட் லெவன்டோஸ்கி பெற்றதோடு, மைன்ஸ் சார்பாக ஜொனதன் புர்கார்ட், மூஸா நியாக்ஹட்டே, லியான்ட்ரோ பரெய்ரோ ஆகியோர் தலா ஒவொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற வி.எஃப்.எல் போச்சுமுடனான போட்டியில் 3-4 என்ற கோல் கணக்கில் டொட்டமுண்ட் தோற்றது. டொட்டமுண்ட் சார்பாகப் பெறப்பட்ட மூன்று கோல்களையும் எர்லிங் பிறோட் ஹலான்ட் பெற்றிருந்தார். போச்சும் சார்பாக, செபஸ்டியன் பொல்டர், ஜெர்ரிட் ஹொல்ட்மன், ஜூர்ஜன் லொகடியா, மிலோஸ் பன்டோவிச் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றார்.

ஐ.பி.எல்:

## மும்பைக்கு முதல் வெற்றி

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்),மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸுடனான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட ராஜஸ்தான் 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், ஜொஸ் பட்லர் 67 (52) ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில், றிலே மெரெடித் 4-0-24-2, குமார் கார்த்திகேயா 4-0-19-1, டேனியல் சாம்ஸ் 4-0-32-1, ஜஸ்பிரிட் பும்ரா 4-0-27-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 159 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மும்பை, சூரியகுமார் யாதவ்வின் 51 (39), திலக் வர்மாவின் 35 (30), டிம் டேவிட்டின் ஆட்டமிழக்காத 20 (09), டேனியல் சாம்ஸின் ஆட்டமிழக்காத 6 (1) ஓட்டங்களோடு 19.2 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், இரவிச்சந்திரன் அஷ்வின் 4-0-21-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக சூரியகுமார் யாதவ் தெரிவானார்.



## தேசிய மட்ட சதுரங்க போட்டியில் சாய்ந்தமருது சபிலுல் லமா

நூருல் ஹுதா உமர்

இலங்கை சதுரங்க சம்மேளனம் நடத்திய போட்டியில் சாய்ந்தமருது கல்முனை அல்-ஹிலால் வித்தியாலயம் சார்பாக பங்குபற்றிய சாய்ந்தமருது சபிலுல் லமா அடுத்த சுற்றான கொழும்பில் நடக்கவிருக்கும் தேசிய மட்டத்தில் விளையாட தெரிவு செய்யப்பட்டுள்ளார். எட்டு வயதுக்குட்பட்ட பெண்களுக்காக நடத்தப்பட்ட இப்போட்டிகளில் கலந்து கொண்டு சபிலுல் லமா முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டார். இத்தொடருக்கு தெரிவு செய்யப்பட்ட முதல் அம்பாறை மாவட்ட சிறுமி இவர் ஆவார்.




பள்ளிவாசலில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்;

# 50 பேர் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தானில் காபுல் நகரில் உள்ள 'ஹலிபா ஷகிப்' என்ற பள்ளிவாசலில் கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 50 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ரமழான் மாதம் என்பதால் வெள்ளிக்கிழமை குறித்த பள்ளிவாசலுக்கு அதிக அளவிலானோர் வழிபாடு செய்ய வருகை தந்திருந்தனர்.

இந்நிலையில், சன்னி பிரிவினர் வழிபாடு நடத்தும் குறித்த பள்ளிவாசலில் ஐஸ் பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 50 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், பலர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## களைகட்டும் பியர் திருவிழா

ஜேர்மனியில் கடந்த 200 ஆண்டுகளான 'பியர் திருவிழா' வெகு விமரிசையாக அந்நாட்டு மக்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது.

எனினும், கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக, கடந்த 2 ஆண்டுகளாகக் இத் திருவிழா கொண்டாடப்படவில்லை.

இந்நிலையில், பியர் திருவிழாவுக்கு பெயர்போன முனிச் நகரில், மீண்டும் பியர் திருவிழா வெள்ளிக்கிழமை (29) ஆரம்பமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

17 நாள்கள் நடைபெறும் இத் திருவிழாவில், உலகில் உள்ள அனைத்து விதமான பியர் வகைகளும் விநியோகம் செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இத்திருவிழாவில் பலதரப்பட்ட கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

ஆரம்ப காலங்களில் ஜேர்மனியைச் சேர்ந்தவர்கள் மாத்திரமே இத்திருவிழாவில் கலந்து கொண்ட நிலையில், தற்போது பல்வேறு நாடுகைளைச் சேர்ந்த மக்களும் கலந்து கொள்கிறார்கள்.

இந்நிலையில், இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் கோலாகலமாக இத் திருவிழா நடைபெறுவதால், சுமார் 60 லட்சத்திற்கும் மேற்பட்டோர் ஜேர்மனிக்கு வருகை தரலாம் எனவும் எதிர்பார்க்கப்பட்டு உள்ளது.





## பெயர் வைப்பது குறித்து புதிய சட்டம்

இத்தாலியில் பிறக்கின்ற குழந்தைகளுக்குப் பொதுவாக அவர்களின் பெயருக்குப் பின்னால் தந்தையின் பெயர் சேர்க்கப்படுகின்றது.

இந்நிலையில் அந்நாட்டில் பிறக்கும் குழந்தைகளின் பெயருக்குப் பின்னால், இனிவரும் காலங்களில் தந்தை, தாய் என இருவரது பெயர்களையும் சேர்த்து கொள்ளுமாறு அந்நாட்டு அரசியல் சாசன நீதிமன்றம் அதிரடி உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளது.

மேலும், தந்தையின் பெயரை மாத்திரமே தனது பெயருக்கு பின்னால் குழந்தைகள் கொண்டிருப்பது பாகுபாடு மற்றும் அடையாளத்துக்கு கேடு விளைவிக்கும் எனவும் தாய், தந்தை இருவரும் சம்மதம் தெரிவித்தால், யாராவது ஒருவரது பெயரைத் தங்கள் பெயருக்குப் பின்னால் குழந்தைகள் கொண்டிருக்கலாம் எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் நீதிமன்றத்தின் குறித்த தீர்ப்பானது அந்நாட்டு மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.




# பாகிஸ்தானில் 18 மணிநேர மின்தடை

பாகிஸ்தானின் அண்மைக் காலமாக நிலவி வரும் கடும் எரிசக்தி நெருக்கடி காரணமாக, அந்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பல மணி நேரம், மின்சாரம் துண்டிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, நகர்புறங்களில் 6- 10 மணி நேரம் மின்வெட்டு ஏற்படுவதாகவும், கிராமங்களில் ஒரு சில பகுதிகளில் 18 மணி நேரம் தொடர்ந்து மின்வெட்டு ஏற்படுவதாகவும் இதனால் பெரும்பாலான பகுதிகள் இருளில் மூழ்கிக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



# குண்டுடன் வந்த தம்பதி

### அலறியடித்து ஓடிய சக விமானப் பயணிகள்

வெடிகுண்டுடன் விமான நிலையத்திற்கு வந்த தம்பதியை கண்டு, சக பயணிகள் அலயறிடித்துக் கொண்டு ஓடிய சம்பவம் இஸ்ரேலில் இடம்பெற்றுள்ளது.

கோலன் பகுதிக்கு சுற்றுலா சென்ற அமெரிக்காவை சேர்ந்த தம்பதி, கீழே கிடந்த ஒரு பொருளை தங்கள் நாட்டுக்கு கொண்டு செல்ல முயன்றுள்ளனர்.

விமான நிலையத்திற்கு அப்பொருளை தம்பதி கொண்டு சென்ற நிலையில், பாதுகாப்பு சோதனையில் அது வெடிக்காத குண்டு என கண்டுபிடிக்கப்பட்டது.

இதைக் கண்ட சக பயணிகள் நிலையத்திற்குள் அலறியடித்து ஓட்டம் பிடித்தனர். இதையடுத்து பல்வேறு கட்ட விசாரணைக்கு பின்னர் தம்பதி வெளியேற அனுமதிக்கப்பட்டனர்.

தப்பிக்கும் முயற்சியில் கீழே விழுந்து காயமடைந்த சிலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் திங்கட்கிழமை, 02 மே 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.

இலங்கை தினசரி
மற்றும் வாரந்த
பத்திரிகைகளை
உங்கள்
மொபைலில்
பெற்றுக்கொள்ள
எம்மோடு
இணையுங்கள்

Viber இல் இணைய
இங்கே CLICK
செய்யுங்கள்




இக் குழுமத்தில் இணைவதனால்
மற்றவர்கள் உங்கள்
தொலைபேசி இலக்கத்தை
பார்வையிட முடியாது

